திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே பணி செய்த துப்புரவாளர்கள் நிதி நிலைமை இல்லாததன் காரணத்தால் நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே 34 பேர்கள் கொடுக்கலாம் என்று முடிவு எடுக்கின்றபோது ஏற்கனவே பணி செய்து நீக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்த இடத்திலே பணிபுரிந்த யாரையும் நீக்கியதாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீக்கி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் அதுபற்றிப் பரிசீலனை செய்து அப்படி யாராவது நீக்கப்பட்டு இருக்கிறார்களா என்று பார்த்து அதுபற்றி எந்த ரூல்ஸ்படி எப்படிக் கொண்டு வரலாம் என்பதைப் பார்க்கிறேன்.

உடல் நலப் பணியாளர்களுக்கு பயிற்சி கொடுக்கும் இடங்கள்

*வினா எண். 712—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உடல்நலப் பணியாளர்களுக்கு (Health workers) பயிற்சி கொடுக்கும் இடங்கள் எங்கெங்கு உள்ளன ?

(ஆ) அவைகளில் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பேர்கள் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்போது பதவியில் உள்ள உடல் நலப் பணியாளர்களை பலநோக்குத் திட்ட பணியாளர்களாக அமர்த்துவதற்காக விசேஷ பயிற்சி 40 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கப்படுகிறது.

(ஆ) 31—12—1980 முடிய மொத்தம் 3,633 உடல் நலப் பணியாளர்கள் (ஆண், பெண்) பயிற்சி பெற்று இருக்கிறார்கள். மேலும் 9 தலைமை மாவட்ட மருத்துவமனைப் பள்ளிகளில் ஆண்டுதோறும் 780 பேர்கள் (பெண்கள்) பயிற்சி பெறுகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உடல் பயிற்சி கொடுப்பது 40 இடங்களில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்

1982 ஏப்ரல் 11]

3,633 பேர் பயிற்சி பெற்றிருப்பதாகவும், 9 தலைமையிடங்களில்பயிற்சி கொடுக்கப்படுவதாகவும் அமைச்சர் சொன்னார். இது எங்கெங்கு உள்ளது? இந்தப் பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் கொடுக்கப்படுகின்றதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, 40 இடங்களில் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. அது நீண்ட பட்டியல். இருந்தாலும் 9 மாவட்ட தலைமை மருத்துவ மனைகளை மட்டும் சொல்கிறேன். திருச்சிராப்பள்ளி, சேலம், திண்டுக்கல், வேலூர், கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், காஞ்சிபுரம், நாகர்கோயில் ஆகிய 9 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அடுத்து அவர்களின் வேலைக்கு உத்தரவாதம் பற்றிக் கேட்டார்கள். இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம் நமக்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு இவர்கள் இல்லை. ஆகவே அத்தனை பேருக்கும் வேலை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய் சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை.

*வினா எண். 713.— டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த தொழுநோய் சிகிச்சை நிலையங்கள் எவ்வளவு ?

(ஆ) அவைகளை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த தொழு நோய் சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை 320 ஆகும்.

(ஆ) இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4, 5 ஆண்டுகளாக தமிழகத்திலே தொழு நோய் அதிகம் பரவியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. பரிசோதித்துப் பார்த்ததிலும், சிகிச்சை அளித்ததிலும் அதிலே நல்ல முன்னேற்றத்தை அரசு கண்டுள்ளது. பல மருந்துகளை